10.11.2024.

கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமா்வு வழக்கு எண். 43 /2021

அ.சா.16

| | | | |
|---|---|---|---|
| பெயா் | கோவிந்தராஜன் | | |
| த/பெ | ரங்கநாதன் | | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 63 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளா் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறாா்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். என்னை கோவிந்தராஜ் என்றும் அழைப்பார்கள். நான் பாண்டிச்சேரி இன்ஜீனியரிங் கல்லூரியில் உதவியாளராக இருந்து பணிஓய்வு பெற்றுள்ளேன். எனக்கு இந்த வழக்கில் இறந்துபோன பள்ளிப்புதுப்பட்டு காலனியை சேர்ந்த ராதாகிருஷ்ணன் மகன் ராஜ்கிரனை தெரியாது. எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு ஒன்றும் தெரியாது. நான் எனது மனைவி ஊரான பள்ளிப்புதுப்பட்டுக்கு புதுவையில் இருந்து அடிக்கடி சென்று வருவேன். நான் அங்கு நிரந்தரமாக குடியிருக்கவில்லை. ஆனால் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் ராஜ்கிரன் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன். என் மனைவி வீடு ராஜ்கிரன் வீட்டிற்கு எதிர் வீடாகும். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் ராஜ்கிரனின் எதிர் வீட்டில் நிரந்தரமாக குடியிருந்து வந்தேன் என்றும் , என்னை போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள் என்றும் , விசாரணையில் நான் ராஜ்கிரனுக்கும் அவரது மனைவி சசி என்கிற கஸ்தூரிக்கும் அடிக்கடி சண்டை வரும் என்றும் ஒரு வருடத்திற்கு முன்பு கஸ்தூரி வளவனூர் காலனியைச் சேர்ந்த தீபக்ராஜ் என்பவரோடு தன் குழந்தைகளை விட்டுவிட்டு ஓடிவிட்டார் என்றும், சம்பவத்திற்கு சுமார் ஒரு வாரத்திற்கு முன்பு வீட்டிற்கு வந்து ராஜ்கிரனுடன் குடும்பம் செய்தார் என்றும், அப்போது ராஜ்கிரன் இல்லாத சமயங்களில் தீபக்ராஜ் வீட்டிற்கு வந்து சென்றார் என்றும் , இதனால் மீண்டும் அவர்களுக்குள் சண்டை நடந்தது என சொன்னேன் என்றால் சரியல்ல. கடந்த 13.04.2019 ம் தேதி காலை 02.30 மணியளவில் ராஜ்கிரன் வீட்டில் குழந்தைகள் அலறி அழும் சத்தம் கேட்டது என்றும், அப்போது நான் விழித்துக்கொண்டு வெளியில் வந்து பார்த்தேன் என்றும், ராஜ்கிரனின் மனைவி கஸ்தூரியும், கஸ்தூரியின் அம்மா கலாவும் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வேகமாக வீட்டைவிட்டு போனார்கள் என்றும், ஏதோ வீட்டில் சண்டை அதனால் போகிறார்கள் என்று இருந்துவிட்டேன் என்றும், சிறிது நேரம் கழித்து அந்த வீட்டில் இருந்து

தீபக்ராஜ் என்பவரும் அவருடன் மற்றொருவரும் பாயில் எதையோ ஒன்றை சுருட்டி மோட்டார் சைக்கிளில் வைத்துக்கொண்டு வேகமாக சென்றார்கள் என்றும், பிறகு காலையில் ராஜ்கிரனின் பிரேதம் பள்ளியனேலியனூர் இரயில்வே கேட்டில் இருந்து புதுவை செல்லும் இரயில் பாதையில் கிடப்பதாக அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் தகவல் கொடுக்க தானும் ராஜ்கிரனின் அம்மா மற்றும் ஊர்க்காரர்கள் சென்று பார்த்தோம் என்றும், ஆனால் ராஜ்கிரனின் மனைவி, குழந்தைகள் யாரும் வீட்டில் இல்லை என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல.

நாங்கள் பார்த்தபோது ராஜ்கிரனின் தலையில் பலத்த வெட்டுக்காயங்களும், உடலில் சிராய்ப்பு காயங்களும் இருந்தன என்றும், அப்போது தான் தீபக்ராஜை இரவு பார்த்ததும், மோட்டார் சைக்கிளில் எதையோ மறைத்து எடுத்துச் சென்றது தீபக்ராஜை கொலை செய்து பிரேதத்தை எடுத்துச் சென்றது தான் என்றும் பிறகு தீபக்ராஜும் ராஜ்கிரன் மனைவி கஸ்தூரியும் ஆழியூர் மணியக்காரரிடம் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்துக்கொண்டார்கள் என்றும், அதன் அடிப்படையில் அவர்களை கண்டமங்கலம் போலீசார் கைது செய்துள்ளார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை.**

**<u>மறுவிசாரணை</u>**

**இல்லை**